4th November 1965]

திரு. எஸ். முருகையன்: ஆண்டவன் இல்லாத ஆலயம் என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கு ஆண்டவன் இருக்கிறார். இருக்கவேண்டிய இடத்திற்குச் சற்று தூரத்தில் இருக்கிறார். அங்கே ஆண்டவன் இல்லாத ஆலயம் அல்ல, நீர் இல்லாத ஆறு அல்ல, அழகு இல்லாத பெண்கள் அல்ல. வேலூரில் எல்லாம் இருக்கிறது. ஆனால், முறைப்படி செய்ய வேண்டியதைச் செய்யவில்லை. வேறு ஒன்றும் குறையில்லை.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் போய்ப் பார்த்து இருக்கிறேன். அது குறையாகத்தான் இருக்கிறது. கடவுள் கர்ப்ப கிருஹத்தில் இல்லாத குறையாகத்தான் இருக்கிறது. அங்கு கடவுள் இருக்கிறதாகத் தெரியவில்லை. ஆனால், உயர்ந்த வேதாந்தத்தின்படி கடவுள் எங்கும் இருக்கிறார் என்றும் சொல்லலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: ஆண்டவன் இல்லாத இடத்திற்குக் கோயில் என்று சொல்வது பொருந்துமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நாம் எத்தனையோ விசித்திரமான வேலைகளில் ஈடுபட்டு இருக்கிறோம். அதில் இதுவும் ஒன்று என்று வைத்துக்கொள்ளலாம்.

Ahobila Mutt

* 264 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to the report of the Sri C. P. Ramaswamy Iyer's Committee regarding the alienation of Mutt lands by the Jeer of Ahobila Mutt;

(*b*) whether the head of the Mutt has obtained the permission of the Government for disposing of the lands;

(*c*) the action, if any, taken to get back the lands; and

(*d*) whether there is any proposal to make an enquiry regarding the mismanagement of the Mutt?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) No.

(*c*) & (*d*) No suit can be filed to set aside alienation even though they are null and void under section 34 (1) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959. The Commissioner is taking action to frame a Scheme for the Mutt. Meanwhile the Jeer has given an undertaking on 30th December 1962 not to sell the lands without proper sanction in future.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, அஹோபில மட ஜீயர் ஏறத்தாழ 700 ஏக்கர் நிலத்தை 3½ லட்ச ரூபாய்க்குத் தனிப்பட்ட முறையிலே விற்று

விட்டதாகவும் அதுபற்றி நடவடிக்கை எடுக்க விண்ணப்பம் கொடுக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத்தான் விடை அளித்தேன். அம்மாதிரி புகாரை விசாரித்ததில் ஒரு "ஸ்கீம்" போட்டு, சட்டத்திற்கு உட்பட்டு, கமிஷனர் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்று கூறினேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : விற்பனை செய்யப்பட்ட மட்டில் அந்த விற்பனை எல்லாம் சரியான விற்பனைதானா? விற்ற நிலத்திற்கு சரியான தொகை பெறப்பட்டு இருக்கிறதா என்பதைக் கமிஷனர் விசாரித்தாரா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதெல்லாம், சட்டப்படி, முறைப்படி விசாரணை செய்யப்பட்டு வருகிற விஷயம்.

திரு. எஸ். முருகையன் : விற்ற நிலம் போக, மீதி நிலங்களை யாவது விற்காமல் நிறுத்த, சர்க்கார் தடை உத்தரவு போடுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதிலே சர்க்கார் எல்லா வற்றையும் செய்ய முடியவில்லை. மேலே கோர்ட்டு இருக்கிறது. அற நிலைய இலாகா எந்த அளவுக்கு, சட்டத்திற்கு உட்பட்டு கவனம் செலுத்த முடியுமோ அதிலெல்லாம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்த விசாரணை எத்தனை நாளாக நடைபெற்று வருகிறது, எவ்வளவு காலதாமதம் ஆகி இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கெல்லாம் கால வரம்பு ஒன்றும் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, அஹோபில மடத்தைப் பொறுத்தவரையில் ஊழல்கள் பல நிறைந்து இருப்பதாகப் பரவலாகச் சொல்லப்படுகிறது. அதைப் பற்றி விசாரிக்க, தனிக் குழு ஒன்றினை நியமித்து விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க, அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டப்படி அற நிலைய இலாகாவுக்கு வரம்பு இருக்கிறது. அதற்குமேல் கோர்ட்டு இருக்கிறது. தனிக் குழு வைத்துப் பயன் இல்லை.

Funds under 'Housing' in Plan Schemes

*265 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any communication from the Centre has recently been received on the provision and utilisation of adequate funds under 'Housing' in Plan Schemes; and

(*b*) if so, the action taken thereon?